**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# C.P.No. 87/2019

**Deposition of RW1**

Name : R.சந்திரசேகரன் Husband / Father's Name : ராஜமாணிக்கம்

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tr.M.Raju, Bench Clerk of this court on 07.07.2022 in accordance with Provisions X of Evidence Act 1872.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு முதல் சாட்சி ஆவேன். நான் எனது முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணை சாட்சியமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

02.07.2022 ஆம் தேதி இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு 1 ஆம் எதிர்மனுதாரரின் பொது மேலாளர் எனக்கு வழங்கிய அதிகார கடிதம் – எ.ம.சா.ஆ.1

16.05.2018 ஆம் தேதி உதவி மேலாளர் ஓய்வூதியம் சேலம் மனுதாரருக்கு வழங்கிய கடிதம் – ஜெராக்ஸ் நகல் – எ.ம.சா.ஆ.2

25.11.2019 அன்று உதவி மேலாளர் ஓய்வூதயம் சேலம் மனுதாரருக்கு வழங்கிய கடிதம் – ஜெராக்ஸ் நகல் – எ.ம.சா.ஆ.3

06.03.2020 அன்று உதவி மேலாளர் ஓய்வூதயம் சேலம் பிரிவு பொறுப்பாளர் (MACT)த.அ.போ.க(தருமபுரி) மண்டலம் வழங்கிய கடிதம் – அசல் – எ.ம.சா.ஆ.4
08.09.2003 ம் தேதி சென்னை தலைமை செயலகத்திலிருந்து தமிழ்நாடு அரசுபோக்குவரத்துக்கழக EBF trust Administrator க்கு அனுப்பிய கடிதத்தின் ஜெராக்ஸ் நகல் – எ.ம.சா.ஆ.5

26.04.2004 அன்று போக்குவரத்துறை தலைமை செயலகதிலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தில் Pension fund trust administrator க்கு அனுப்பிய கடிதம் – ஜெராக்ஸ் நகல் – எ.ம.சா.ஆ.6

02.01.2021 உதவி மேலாளர்(ஓய்வூதியம்) சேலம் அவர்களின் கடிதம் – அசல்– எ.ம.சா.ஆ.7
12.02.2019 G.O.No.32 அரசாணை மொத்தம் 2 தாள்கள் – ஜெராக்ஸ் நகல் – எ.ம.சா.ஆ.8
26.08.2019 G.O.No.32 அரசாணை மொத்தம் 2 தாள்கள் – ஜெராக்ஸ் நகல் – எ.ம.சா.ஆ.9
04.05.2022 உதவி மேலாளர் (ஓய்வூதயம்) சேலம் அவர்களின் கடிதம் – அசல் – எ.ம.சா.ஆ.10
மனுதாரரின் பணிப்பதிவேடு மொத்தம் தாள்கள் 52 – சான்றொப்பமிட்ட ஜெராக்ஸ் நகல் – எ.ம.சா.ஆ.11
எனவே மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**குறுக்கு விசாரணை –**

மனுதாரர் 31.05.2018 அன்று மனுதாரர் ஓய்வு பெற்றார் என்றால் சரிதான்.

June 2018 மாதத்திற்கான ஓய்வூதியத்தை July 2018 ல் வழங்கவேண்டும் என்றால் சரிதான். மனுதாரருக்கு முதன் முதல் ஓய்வூதயம் எப்போது ஓய்வூதயம் கொடுக்கப்ட்டது என்றால் September 2018 ல் வழங்கப்பட்டது. மனுதாரரை 16.05.2018 அன்று அலுவலகத்திற்கு வரச்சொல்லி நிர்வாத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் அலுவலகத்திற்கு சென்றபோது அவரிடம் அவர் நிர்வாகத்திற்கு ரூ.94972/ ஐ செலுத்தவேண்டி உள்ளது, அந்த தொகையை செலுத்தினால் தான் ஓய்வூதிய விண்ணப்பம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் தாக்கல் செய்த பணிக்கொடை வழக்கில் மேலே கூறப்பட்ட ரூ.94972/ ஐ பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யவேண்டும் என்று நிர்வாகத்தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது என்றால் சரிதான், அவரிடம் விருப்பத்தை பெற்றுக்கொண்டுதான் கோரிக்கை வைக்கப்பட்டது. பணிக்கொடையில் மேற்படி தொகையை பிடித்தம் செய்யமுடியாது என்று அந்த வழக்கில் உத்தரவு ஏற்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.8 09.10.2020 ந்தேதி மனுதாரருக்கு நிர்வாகம் அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.11 மனுதாரரின் பணிப்பதிவேட்டில் பக்கம் 51க்கு பின்னர் எண்ணிடப்படாத தாளில் மேற்காணும் விகிதம் உள்ள தொகை ரூ.94972/- அவருக்கு வழங்கப்படஉள்ள பிற தொகைகளான படி, பணிக்கொடை தொகை, பென்சன் நிர்வாக ஒப்புதல் பெற்று பிடித்தம் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பணிக்கொடை நீக்கப்பட்டுள்ளது. மேலும் பக்கம் 52 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பணிக்கொடை தீர்ப்பில் மறுக்கப்பட்ட பிறகு பணிப்பதிவேட்டில் பணிக்கொடை தொகை என்பதை நீக்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல. நிறைவேற்றப்படாத தண்டணைக்கான தொகையை ஓய்வுபெற்ற பிறகு பிடித்தம் செய்வது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. மனுதாரர் கடைசியாக பெற்ற அகவிலைப்படி 7% என்றால் எனக்கு தெரியாது. மனுதாரருக்கு தற்போது எவ்வளவு அகவிலைப்படி வழங்கப்படுகிறது என்றால்

5% வழங்கப்படுகிறது. ஒரு நபர் பணியில் இருக்கும்போது 7% அகவிலைப்படி பெற்றுவந்தால் ஓய்வூதியத்திலும் 7% ம் அதற்கு மேலும் வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.8 மற்றும் 9 அரசாணைகள் மனுதாரருக்கு பொருந்தாது என்றால் சரிதான். மனுதாரர் ஓய்வூதிய விண்ணப்பத்தை காலதாமதமாக சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சேலத்தில் அயல்பணியில் வேலை செய்து வருகிறேன்.

மறுவிசாரணை – இல்லை

(Sd/ S.Sumathy)
Presiding Officer,
Labour Court, Salem.